ආයතනයේ නම:- වාරිමාර්ග අමාත්‍යාංශය

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලැබූ පියවර පාර්ලිමේන්තුවට ඉදිරිපත් කිරීම

நிறுவனத்தின் பெயர் :- நீர்ப்பாசன அமைச்சு

பாராளுமன்றத்தின் அரச கணக்கு குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்தல்.

Name of the institution:- Ministry of Irrigation

Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the committee on public Accounts in terms of standing order No 119(4)

பத்திரம் (இலக்கம் 1)

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் :- 183

நிறுவனத்தின் பெயர் :- நீர்ப்பாசன அமைச்சு

	குழுவினால் அடையாளம் காணப்பட்ட குறைப்பாடுகள்	குறைப்பாடுகளை நிவர்த்தி செய்யும் நோக்கில் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / நடப்பு நிலைப்பாடு
1.	மென்பொருள் தொடர்பான முதலாவது கடவுச் சொல்லை கணக்காளர் அல்லது அனுமதி பெற்றுள்ள பதவி நிலை உத்தியோகத்தர் மட்டும் பயன்படுத்தவில்லை.	சம்பளம் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் கணினி மென்பொருள் தொடர்பான முதலாவது கடவுச் சொல், தற்சமயம் தலைமை கணக்காளரினால் மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றது.
2.	மென்பொருள் தொடர்பான முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாம் கடவுச் சொற்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மாற்றப்படவில்லை.	தொடர்புடைய கடவுச் சொற்களை மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை மாற்றுவதற்கு தற்சமயம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
3.	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் அனுப்பப்படவில்லை.	இவ் அமைச்சின் கீழ், நாடு முழுதும் பல நிறுவனங்களும், கருத்திட்டங்களும் பரம்பிக் காணப்படுவதுடன், அந் நிறுவனங்கள் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பாக வெளியிடப்படுகின்ற கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில்களைத் தயாரிக்கையில் அந் நிறுவனங்கள் / கருத்திட்டங்களிலிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. இதன் போது குறிப்பிடத்தக்களவான காலப் பகுதி தேவைப்படுவதால் ஒரு சில கணக்காய்வு ஐய வினாக்களுக்கு ஒரு மாத காலத்திற்குள் பதில்களை முன் வைக்க முடியாத நிலை ஏற்படுகின்றது. அத்தகைய சந்தர்ப்பங்களில் பதில்களை முன் வைக்கும் பொருட்டு வழங்கப்படுகின்ற காலப் பகுதியை நீடிப்பதற்கான கோரிக்கை உதவிக் கணக்காய்வாளர் / கணக்காய்வு அதிகாரிக்கு அனுமதிக்கென முன் வைக்கப்படுகின்றது.
4.	நிதி ஒழுங்கு விதி 134 (2) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்காமை.	தற்சமயம், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.
5.	2017.06.26 ஆம் திகதிய 1/2017 ஆம் இலக்க சொத்துக்களுக்கான முகாமைத்துவ சுற்றறிக்கையின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் விற்றொழித்தல்கள் பற்றிய தகவல்கள் கொம்ட்ரோலர் நாயகம் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	கொள்வனவு செய்யப்படுகின்ற சொத்துக்கள் மற்றும் விற்றொழித்தல்கள் பற்றிய தகவல்கள் தற்சமயம் கொம்ட்ரோலர் நாயகம் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.
6.	2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள	இவ் விடயம் தொடர்பாக எதிர்வரும் காலப் பகுதியில் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

	ஏற்பாடுகளுக்கு அமைய நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களின், எரிபொருள் தகனம் பற்றிய சோதனை மேற்கொள்ளப்படாமை.	
7.	நி. ஒ. 94 (1) இன்படி செலவு விடயமொன்று செய்யப்பட்டிருந்த ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்ட பின்னர், ஆண்டிறுதியில் எஞ்சிய ஒதுக்கீடுகளின் வரம்பினை விஞ்சாதபடி பொறுப்புக்கள் ஏற்கப்பட்டிருந்தது.	அலுவலக செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குத் தேவையான அத்தியாவசியமான மின்சார, நீர் சுத்திகரிப்பு, பாதுகாப்பு போன்ற சேவைகளுக்கென வருடாந்தம் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் போதுமானதாகக் காணப்படாமையால் அனுமதிக்கப்பட்ட எல்லைகளைத் தாண்டியதாகப் பொறுப்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், இயன்றளவுக்கு அனுமதிக்கப்பட்ட வருடாந்த விலை மதிப்பீடுகளினுள் செலவுகளை முகாமைத்துவப்படுத்துவதற்குத் தேவையான உள்ளக கட்டுப்பாட்டுச் செயன் முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
8.	ஓராண்டுக்கும் மேலாக காணப்படும் நிலுவைக் கடன் மீதிகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	ஓராண்டுக்கும் மேலாகக் காணப்படுகின்ற ரூபா 661,642 ஆன நிலுவைக் கடன் மீதியில், தற்சமயம் ரூபா 345,470 ஆன பணத் தொகை தீர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய ரூபா 316,172 ஆன பணத் தொகை இவ் அமைச்சின் கீழ் நிலை நாட்டப்பட்டுள்ள நீர்ப்பாசன முகாமைத்துவப் பிரிவிலிருந்து பணியை விட்டுச் சென்ற மற்றும் மரணித்த இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதியாகக் காணப்படுகின்றது. அப் பணத் தொகையை அறவிடுவதுடன் தொடர்புடைய செயற்பாடுகள் தற்சமயம் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன.
9.	பிரசைகள் / சேவை பெறுனர் சமவாயம் முறைப்படி தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.	நீர்ப்பாசன அமைச்சு நேரடியாக வெளி வாரி பிரசைகள் / சேவை பெறுனர்களுக்கு சேவைகளையோ அல்லது வசதிகளையோ வழங்காத நிறுவனமாகக் காணப்படுவதால், பிரசைகள் / சேவை பெறுனர் சமவாயத்தைத் தயாரித்தல் தொடர்பாகக் கூடியளவில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. இவ் அமைச்சின் கீழான பிரதான பணிகள் பின்வருமாறு, I. அமைச்சின் கீழ் இயங்கக் கூடிய கருத்திட்டங்கள் மற்றும் நிறுவனங்களின் செயற் பணிகளுடன் தொடர்புடைய கொள்கை உறுவாகம் மற்றும் அக் கொள்கைகள் செயற்படுத்தப்படுவதை உறுதிப்படுத்திய வண்ணம் நீர் வளங்கள் மற்றும் நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்துதல்.

		II. நீர் மூலாதாரங்கள் மற்றும் நீர்ப்பாசன முகாமைத்துவம், பராமரிப்பு III. நீர் வளங்கள் மற்றும் நீர்ப்பாசனத் தொகுதிகளை பாதுகாத்தல் மற்றும் பேணுதல் போன்ற செயற்பாடுகள் எவ்வாறாயினும், அமைச்சிலும், அதன் கீழான நிறுவனங்களிலும் பணியாற்றுகின்ற உள்ளக பணிக் குழுவிற்கு சேவை வழங்குகையுடன் தொடர்புடைய உள்ளக சேவை பெறுனர் அளவுகோல்கள் விருத்தி செய்யப்பட்டுள்ளன. உதாரணம், I. அமைச்சில் அல்லது நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பணியாற்றுகின்ற உத்தியோகத்தரொருவரை பதவியில் நிரந்தரமாக்குதல் / பதவியுயர்த்துவதுடன் தொடர்புடைய கோரிக்கைகளை இரண்டு அல்லது மூன்று பணி நாட்களினுள் பூர்த்தி செய்து நிறைவு செய்தல் அல்லது தொடர்புடைய நிறுவனங்களுக்கு முன் வைத்தல். II. ஏதாவதொரு கருத்திட்டம் (நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாகக் கிடைக்கின்ற பொது மக்களின் முறைப்பாடுகளுடன் தொடர்புடையதாக, பணியாற்றுகின்ற 07 அல்லது 10 நாட்களினுள் உப பதிலொன்றை அனுப்புதல். எனினும், தொடர்புடைய நிறுவனங்களினால் தகவல்களை முன் வைப்பதற்கு தேவையான காலப் பகுதியின் அடிப்படையில் இறுதிப் பதிலை முன் வைப்பதற்குத் தேவையான காலப் பகுதி மாறுபடும். III. தகவல் அறியும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்தல். IV. இவ் உள்ளக சேவை பெறுனர்களுடன் தொடர்புடைய சமவாயத்தை மேலும் விருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
10.	பொது நிருவாக ஏற்பாடுகளுக்கு இணங்க முறையான மனித வளத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. தயாரிக்கப்பட்டிருந்த மனித வளத் திட்டம் மூலமாக ஓர் ஊழியருக்காக குறைந்த பட்சம் 12 மணித்தியால மேலதிகப் பயிற்சி விதிக்கப்பட்டிருக்கவில்லை.	I. பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் மனித வளத் திட்டத்தைத் தயாரிப்பதில் நடைமுறை ரீதியாகப் பல பிரச்சினைகள் காணப்பட்டதுடன், 2020 - 2022 காலப் பகுதியினுள் கொவிட் 19 தொற்று நோய் நிலை காரணமாகவும், நிதி ஒதுக்கீடுகள் வரையறுக்கப்பட்டிருந்தமையாலும் வழங்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின்

		எண்ணிக்கை அதிகளவில் வரையறுக்கப்பட்டிருந்தது. II. அக் காலப் பகுதிகளிலும் நிகழ் நிலை செயன் முறையின் ஊடாகப் பல்வேறு அரச நிறுவனங்களினால் நடாத்தப்படுகின்ற நிகழ் நிலை பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பணிக் குழு இணைப்பு செய்யப்பட்டது. (உதாரணம் :- ஓய்வூதியத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்) III. இதனால் மனித வள அபிவிருத்தித் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு காணப்படாதிருப்பினும், பல பணியாட்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் / திறன் மேம்பாட்டுக்கான வாய்ப்புகளும் ஏற்பாடு செய்யப்பட்டன. IV. பணிக் குழுவின் அனைத்து உயரதிகாரிகளும் வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தத்தினுள் உள்ளடக்கப்பட்டிருப்பதுடன், ஏனைய பணிக் குழுவிற்கு செயலாற்றுகை மதிப்பீட்டுச் செயன் முறை செயற்பட்ட வண்ணமுள்ளது. • நிறுவனத்தின் மனித வள அபிவிருத்திச் செயற்பாடுகள், கொள் திறன் மற்றும் நிபுணத்துவ அபிவிருத்திச் செயற்பாடுகள் போன்றன நிர்வாகப் பிரிவினால் முன்னெடுக்கப்படுகின்றன. அப் பிரிவிற்குப் பொறுப்பான மேலதிகச் செயலாளர் அச் செயற்பாடுகளுக்குப் பொறுப்பான முது நிலை அலுவலராகப் பணியாற்றுகின்றார். • இதற்கு முன்பும் விளக்கப்படுத்தப்பட்டவாறு, 2020, 2021 ஆகிய வருட காலப் பகுதிகளில் நிலவிய கொவிட் 19 தொற்று நோய் நிலை மற்றும் நிதியங்கள் போதியளவில் காணப்படாமை போன்ற விடயங்கள் காரணமாகவும், 2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நிலவிய வலுச் சக்தி பற்றாக்குறை நிலைக்கு மத்தியில் இடைக்கிடையில் நிறுவனத்தின் செயற்பாடுகள் பணிச் சுற்றின் (Work Rotation) அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டதுடன், அத்தகைய விசேடமான சந்தர்ப்பங்களில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிட்டவாறு செயற்படுத்தக் கூடிய வகையிலான நடப்பு நிலைமைகள் நிலவவில்லை.